அ.வ.எண். 28/2018

பெயர்- சொக்கலிங்கசெட்டியார் (பி.வா.சா.2)

நாள்- 30.08.2019

வாதி தரப்பில் கு.வி

என் அப்பா பெயரும் தாத்தா பெயரும் சொக்கலிங்கசெட்டியார்தான். என் அப்பாவுடன் பிறந்தவர்கள் பெருமாள், அய்யப்பன் செட்டியார், லட்சுமி ஆகியோர்கள். சொக்கலிங்கசெட்டியார் பெருமாள் செடடியார் அய்யப்பன்செட்டியார் பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் பாகம் பிரித்துகொண்டார்கள். என் அப்பாவிற்கு நான், சின்னசொக்கலிங்கசெட்டியார். மீனாட்சியம்மாள், பாப்பாத்தியம்மாள், சீனியம்மாள், சவுண்டம்மாள், லட்சுமி, சின்னம்மாள். நாங்கள் எங்கள் சொத்தைபிரித்து கொண்டோம். பெருமாள் செடடியாருக்கு பெருமாள்ராஜ், ராமசாமி, பாண்டி, லட்சுமணன், நாராயணசாமி, சீனியம்மாள், சரஸ்வதி. ஆகியோர்கள் பெருமாள்செட்டியார் வாரிசுகள் சொத்துக்களை பாகம் பிரித்து கொண்டார்கள் என்று சொன்னால் பாகம் பிரிக்கவில்லை அவர்கள் கூட்டாக அனுபவம் செய்யவில்லை ஆனால் ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு சொத்தை பயிர் செய்து வருகிறார்கள். பெருமாள்செட்டியாருக்கு எந்தெந்த இடத்தில் சொத்துகள் உள்ளது என்று குறிப்பிட்டு சொல்லமுடியாது. சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் பட்டா எண். தெரியாது. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை. ராமசாமி அழைத்ததின் பேரில் நான் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு நாராயணசாமி எத்றகாக தாக்கல் செய்துள்ளார் என்று கேட்டால் நான் ஆவணத்தில் கையொப்பம் செய்ததாக ராமசாமி என்னிடம் சொன்னதால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வாதி என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்று எனக்கு தெரியாது. நாராயணசாமி எந்த சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. வாதி என் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. முதல் விசாரணையில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னிடம் காட்டபடும் காவல் நிலையத்தில் எழுதிகொடுத்துள்ள வாக்குமூலத்தில் உ்ள்ள கையொப்பம் என்னுடையதுதான். 1994ம் வருடம் பெருமாள்செட்டியாரின் பிள்ளைகளுக்கு இடையே நடந்த பாகபிரிவினை பத்திரத்தில் நான் கையொப்பம் செய்யவில்லை. பாகபிரிவினை செய்யவில்லை அவர்களாக பிஞ்சைகளை பாடுபட்டு வருகிறார்கள். நான் பொய் சொல்கிறேன் என்றும் பெருமாள் செட்டியாரின் வாரிசுகள் பாகபிரிவினை செய்தார்கள் என்றும் அதில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன்

என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பெருமாள்செட்டியாரின் வாரிசுகள் பாகபிரிவினை செய்துகொண்டார்கள் என்றும் அதன்பேரில் தான் வா.சா.ஆ-6 உருவாக்கபட்டது என்றும் அதில் நான் சாட்சி கையொப்பம் செய்து விட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.